இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 24-12-2024

# அம்பேத்கரும் நேருவும் - வரலாற்றின் பக்கங்கள் - 2

அம்பேத்கருக்கும் நேருவுக்குமான முதல் சந்திப்பு 1939 ஆம் ஆண்டு நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியின் போராட்டக் குழுவின் தலைவராக இருந்த நேரு, பம்பாயில் இரண்டு நாட்கள் அம்பேத்கரைச் சந்தித்துப் பேசினார். அது முதல் இருவருக்கும் நெருக்கமான நட்பு இருந்தது. அதே ஆண்டு, காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகுவது குறித்து காங்கிரஸ் தலைவர்கள் ஒவ்வொருவராக இரண்டு நாட்கள் தொடர்ந்து அம்பேத்கருடன் பேச்சுவார்த்தை நடத்தியதும் இதே ஆண்டு நடைபெற்றது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சி அதன்பிறகு பதவி விலகியது.

1941 ஆம் ஆண்டு இந்திய அரசின் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில் அம்பேத்கர் உறுப்பினர் ஆக்கப்பட்டார். 1942 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்திய வைஸ்ராய் நிர்வாகக் கவுன்சில் உறுப்பினராக அண்ணல் அம்பேத்கர் நியமிக்கப்பட்டார். அவருக்கு தொழிலாளர் நலத் துறை வழங்கப்பட்டது. 1946 வரை இப்பொறுப்பை வகித்தார்.

1946 ஆம் ஆண்டு வங்காள சட்டமன்றத்தில் இருந்து இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்பேத்கர் அனுப்பி வைக்கப்பட்டார். 15.12.1946 அன்று அரசியலமைப்பு அவையில் முதன்முறையாகப் பேசினார். நாடு பிரிவினை அடைந்தபோது அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி, பாகிஸ்தானுக்குப் போய்விட்டது. அதனால் அவர் பதவியை இழக்கும் நிலை ஏற்பட்டது. மகாராஷ்டிரா மாநிலத்தில் தனது பதவியை ராஜினாமா செய்த டாக்டர் எம்.ஆர்.ஜெயகருக்குப் பதிலாக பம்பாய் சட்டமன்ற காங்கிரஸ் கட்சி சார்பாகவே அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். (22.7.1947) சுதந்திர இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தின் நகலைத் தயாரிக்கும் பொருட்டு அரசியல் நிர்ணய சபையானது ஒரு குழுவை 1947 ஆகஸ்ட் 29 அன்று அமைத்தது. அதன் தலைமைப் பொறுப்பு அம்பேத்கருக்கு வழங்கப்பட்டது. ஏழு உறுப்பினர்கள் இருந்தாலும், அதனை எழுதி முடிப்பது என்பது அம்பேத்கர் அவர்களுக்கே முழுப்பொறுப்பாக இருந்தது. 1948 பிப்ரவரியில் முழுமையாக எழுதி வழங்கினார் அண்ணல்.

இப்படி தான் எழுதி வழங்கியதற்கு காங்கிரஸ் கட்சி அளித்த முழு ஒத்துழைப்பை வெளிப்படையாகப் பாராட்டி அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பேசினார்கள். இதை அமித்ஷாக்கள் அறிவார்களா?

**“பட்டியல் சாதியினரின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, நான் அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்தேன். ஆனால் அதிகமான பணி எனக்குத் தரப்பட்டது. வரைவுக் குழுத் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அதிகமாக அதிர்ச்சி அடைந்தேன். என்னை விட திறமைசாலிகள் இந்த வரைவுக் குழுவில் இருக்கிறார்கள். ஆனால் எனக்கு தலைமைப் பதவி தந்ததற்கு நன்றி”** என்று சொன்ன அம்பேத்கர் அவர்கள்,

**“அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் கட்சி இருந்ததால் குழப்பம் இல்லை. அது அவை நடவடிக்கைகளில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் அளித்தது. காங்கிரஸ் கட்சி கட்டுப்பாடாக நடந்து கொண்டதால் வரைவுக்குழு அரசியல் சாசன உருவாக்கத்தை முறையாக வழிநடத்திச் செல்ல முடிந்தது. சபையில் சாசன வரைவு, சிக்கல் இல்லாமல் பரிசீலிக்கப்பட்டதற்கான பாராட்டுகள் காங்கிரஸ் கட்சியையே சேரும்”** என்று மனப்பூர்வமாகப் பாராட்டினார். இன்று புதிதாக அம்பேத்கருக்காக கண்ணீர் வடிக்கும் அமித்ஷாக்கள் அறிவார்களா?

இந்து சட்ட மசோதாதான் அம்பேத்கர் - நேரு நட்பில் நெருடலை ஏற்படுத்தியது.

இந்து சட்ட மசோதாவை 1951 பிப்ரவரி 5 அன்று நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்தார் சட்ட அமைச்சர் அம்பேத்கர். மூன்று நாட்கள் விவாதம் நடந்தது. அடுத்த கூட்டத் தொடரில் விவாதம் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது. செப்டம்பர் மாதம் மீண்டும் விவாதம் தொடங்கியது. அன்றைய அமைச்சர்கள் சிலரே இந்து சட்ட மசோதாவை எதிர்த்தார்கள். ‘இந்து சட்ட மசோதாவை நிறைவேற்றுவேன், இல்லாவிட்டால் மரணம் அடைவேன்’ என்றே சொன்னார் பிரதமர் நேரு. சனாதன சக்திகளின் எதிர்ப்பு அதிகம் ஆனது. நாடாளுமன்றத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் நடந்தது. சட்ட அமைச்சர் அம்பேத்கர் வாழ்ந்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தார்கள். அம்பேத்கருக்கு கொலை மிரட்டல் கடிதங்களும் வந்தது.

நேருவின் அமைச்சரவையில் இருந்து கொண்டே எதிர்த்தவர்களில் முக்கியமானவர் இன்றைய மோடியால் போற்றப்படும், வல்லபாய் படேல் அவர்கள். இந்து மகாசபைத் தலைவராக இருந்து கொண்டே காங்கிரஸ் அமைச்சரவையில் பொறுப்பு வகித்த சியாம் பிரசாத் முகர்ஜியும் அதனை எதிர்த்தார். அன்றைய சபாநாயகர் மாவலன்கர் எதிர்த்தார். குடியரசுத் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத்தும் எதிர்த்தார். இந்து சட்ட மசோதாவை ஆதரித்து குடியரசுத் தலைவருக்கே பிரதமர் நேரு கடிதம் எழுதினார். ‘என்னுடைய அரசு இந்து சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவதை இலட்சியமாகக் கொண்டுள்ளது’ என்று 28.11.1948 அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு அறிவித்தார். தனது ஆதரவை 19.12.1949 அன்று மீண்டும் உறுதி செய்தார் பிரதமர் நேரு.

ஆனால் எதிர்ப்புகள் அதிகம் ஆனதால் இந்த எதிர்ப்புக்கு அன்றைய பிரதமர் நேருவும் கட்டுப்பட வேண்டியதாயிற்று. **இந்து சட்ட மசோதா கிடப்பில் போடப்பட்டது. 1951 செப்டம்பர் 27 அன்று அம்பேத்கர் அமைச்சர் பொறுப்பில் இருந்து விலகினார். விலக வேண்டிய சூழலை உருவாக்கியவர்கள் படேல், சியாம் பிரசாத் முகர்ஜி உள்ளிட்ட பழமைவாத சக்திகள் தானே? அதிலும் குறிப்பாக குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த முதலாளிகள் சிலர் இதனைக் கடுமையாக எதிர்த்ததாக அம்பேத்கரின் மனைவி சவிதா அம்பேத்கர் தனது நூலில் குறிப்பிட்டு இருக்கிறார். (டாக்டர் அம்பேத்கருடன் என் வாழ்க்கை, எதிர் வெளியீடு, பக்கம் 245) அம்பேத்கர் பெயரைச் சொன்னால் அமித்ஷா அலறுவது இதனால்தான்!**

## காஷ்மீரில் 40 நாள்

# கடும் குளிர் காலம் தொடங்கியது!

ஸ்ரீநகர், டிச. 24 –

காஷ்மீரில் 40 நாள் கடும் குளிர் காலம் நேற்று முன்தினம் தொடங்கியது. ஸ்ரீநகரில் கடந்த வெள்ளி இரவு வெப்ப நிலை மைனஸ் 8.5 டிகிரி செல்சியஸாக குறைந்தது. இது கடந்த 50 ஆண்டுகளில் மிக குறைவான வெப்பநிலை என்பது குறிப்பிடத்தக்கது.

காஷ்மீரில் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் கடும் குளிர் காலம் தொடங்கும். இது 40 நாட்கள் நீடிக்கும். இந்த கடும் குளிர் காலம் காஷ்மீரில் நேற்று முன்தினம் தொடங்கியதாக வானிலை மையம் அறிவித்துள்ளது. கடந்த வெள்ளி இரவு ஸ்ரீநகரில் வெப்ப நிலை மைனஸ் 8.5 டிகிரி செல்சியஸாக குறைந்தது. இது கடந்த 50 ஆண்டு களில் மிக குறைவான வெப்ப நிலை.

இதற்கு முன் கடந்த 1974ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெப்ப நிலை மைனஸ் 10.3 டிகிரி செல்சியஸாக குறைந்தது. கடந்த 1934ம் ஆண்டு டிசம்பர் 13ம் தேதி அன்று ஸ்ரீநகரில் குறைந்தபட்ச வெப்ப நிலை மைனஸ் 12.8 டிகிரி செல்சியஸாக குறைந்தது.

காஷ்மீரில் தற்போது கடும் குளிர் நிலவுவதால் தால் ஏரியின் சில பகுதிகள் உட்பட பெரும்பாலான நீர் நிலைகள் உறைந்து வருகின்றன. காஷ்மீரின் பல பகுதிகளில் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. தெற்கு காஷ்மீரில் உள்ள சுற்றுலா தலமான பகல்காமில் குறைந்தபட்ச வெப்ப நிலை மைனஸ் 8.6 டிகிரி செல்சியஸாகவும், குல்மார்க்கில் மைனஸ் 6.2 டிகிரி செல்சியஸாகவும், குப்வாராவில் மைனஸ் 7.2 செல்சியஸாகவும் பதிவானது.

காஷ்மீரில் டிசம்பர் 26ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவும் எனவும், உயரமான மலைப் பகுதிகளில் லேசான பனிப்பொழிவுக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

காஷ்மீரில் அடுத்த சில நாட்களுக்கு ஓரிரு இடங்களில் குளிர் காற்று வீசும் எனவும் கூறப்பட்டுள்ளது.

கடும் குளிர் காலம் ஜனவரி 31ம் தேதியுடன் முடிவடைந்ததும் காஷ்மீரில் குளிர் படிப்படியாக குறையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.12.2024) முகாம் அலுவலகத்தில், முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் அவர்கள் சந்தித்து, அழகப்பா பல்கலைக்கழகத்தில் அவரது ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் நூலகத்தை திறந்து வைத்திட வேண்டுமென்று அழைப்பு விடுத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.12.2024) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலமாக பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 84 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, அவ்விளையாட்டு வீரர், வீராங்கனைகளுடன் முதலமைச்சர் அவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

## வரும் டிச. 30, 31 தேதிகளில் கன்னியாகுமரியில் – முத்தமிழறிஞர் கலைஞரால் திறந்து வைக்கப்பட்ட

# வானுயர்ந்த வள்ளுவர் சிலை வெள்ளி விழா!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் முன்னேற்பாடு பணிகள் தீவிரம்!

கன்னியாகுமரி, டிச. 24 -

கன்னியாகுமரியில் இம்மாதம் 30, 31 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவையொட்டி, முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி கடலில் உள்ள இரு பாறைகளில் விவேகானந்தர் நினைவு மண்டபம், 133 அடி உயர திருவள்ளுவர் சிலை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலையை 1.1.2000இல் அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகளான நிலையில், தமிழக அரசு சார்பில் வெள்ளி விழா நிகழ்ச்சிகள் இம்மாதம் 30, 31-ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளன.

இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், தமிழறிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

இதையொட்டி, கன்னியாகுமரி அரசு விருந்தினர் மாளிகை யில் ஆயிரக்கணக்கானோர் அமரும் வகையில் பிரம்மாண்டான பந்தல் அமைத்தல், வளாகத்தில் உள்ள தங்கும் விடுதிகளைப் புதுப்பித்தல் பணிகள் நடைபெறுகின்றன.



மேலும், கடற்கரைச் சாலை, காந்தி, காமராஜர் நினைவு மண்டபங்கள், சுனாமி நினைவுப் பூங்கா ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணிகள் 95 சதவீதம் நிறைவடைந்துள்ளன. கன்னியாகுமரி காவல் நிலையம் அருகேயுள்ள ரவுண்டானாவை புதுப்பித்தல், கடற்கரைச் சாலையிலுள்ள அரசு சுவர்களில் பல்வேறு இயற்கைக் காட்சிகளை நினைவூட்டும் வண்ண ஓவியங்கள் வரைதல், காந்தி மண்டபம் முன்புள்ள முக்கோணப் பூங்காவை சீரமைத்தல் ஆகிய பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**இணைப்புப் பாலம்:**

கடலில் அமைந்துள்ள நினைவு மண்டபம், திருவள்ளுவர் விவேகானந்தர் சிலை ஆகியவற்றை சுற்றுலாப் பயணிகள் பார்த்து ரசிப்பதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் சார்பில் படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன. கடல் சீற்றம், கடல் நீர்மட்டம் தாழ்வுநிலை ஆகிய கால கட்டங்களில் திருவள்ளுவர் சிலைக்கு படகுகள் இயக்கப் படாததால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைகின்றனர்.

எனவே, இரு பாறைகளையும் இணைக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். அதையேற்று, நெடுஞ்சாலைகள் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில், தமிழ்நாடு கடல்சார் வாரிய வைப்பு நிதியாக ரூ. 37 கோடியில் 97 மீட்டர் நீளம், 4 மீட்டர் அகலமுள்ள கண்ணாடி கூண்டுப் பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மே 24ஆம் தேதி முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ் முன்னிலையில் அமைச்சர் எ.வ.வேலு பணிகளைத் தொடக்கி வைத்தார். தற்போது, பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதால், இப்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இம்மாதம் 30ஆம் தேதி திறந்து வைக்கவுள்ளார். 31ஆம் தேதியும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

விழாவையொட்டி பிரம்மாண்ட பந்தல் அமைக்கும் பணியில் 50க்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

முதல்வர் அவர்கள் வருகையால் கன்னியாகுமரி நகரம் 25 ஆண்டுகளுக்குப் பின்னர் புதுப்பொலிவு பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.